# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

## பதவிகள் - வெற்றிடம்

**கவனிக்க.- 2021.07.09 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி பகுதி I: தொகுதி (IIஅ) - இல் பிரசுரிக்கப்பட்ட பதவிகள்- வெற்றிடம் தலைப்பில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்படுகின்றன.**

### ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை பதவி வெற்றிடங்கள்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலையில் பின்வரும் பதவிகளுக்காக தகுதிவாய்ந்த அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **துணை மருத்துவ சேவை - விசேட தரம்**

- கதிரியக்கவியளாலர் (நோயறிதல்)
- கதிரியக்கவியளாலர் (சிகிச்சை)
- மருத்துவ ஆய்வுகூடத் தொழிநுட்பவியலாளர்
- இயன்மருத்துவ சிகிச்சையாளர்
- மருந்தாளர்
- கண்தொழிநுட்ப வல்லுனர்

**தகைமைகள்.-**

i. தரம் I சேவை வகுதிக்குள் ஆகக் குறைந்தது பத்து (10) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றியிருப்பின், அனைத்து வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளிலும் சித்தி எய்தியிருப்பதுடன் பத்து (10) சம்பள ஏற்றங்களை பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை.**- 22 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்.**- MT 8 (ரூபா 50,970-10×1,385 - 8×1,910- ரூபா 80,100 )

* விசேட தர துணைமருத்துவர்கள் MT 8 ரூபா 53,740.00 இன்3 ஆம் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

02. **செவிலியர் - தாதிய உத்தியோகத்தர் விசேட தரம்**

**தகைமைகள்.-**

i. விசேட தரமுடைய உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

ii. வார்ட் மேற்பார்வையும் முகாமைத்துவமும்/போதித் தலும் மேற்பர்வையும்/பொதுச் சுகாதார தாதியல் மற்றும் குடும்பநலம்/உளச்சிகிச்சை அடங்கலாக தாதியல் கற்கைகளுக்கான தேசிய நிறுவகத்தினால்/அடிப்படை தாதியல் பின் படிப்புப் பாடசாலையால் நடாத்தப்படும் 1 1/2 வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அத்துடன் தரம் I தாதிய உத்தியோகத்தராக (வைத்தியசாலை சேவை, கல்வி, பொதுச்சுகாதாரம்) 05 வருட காலம் சேவையாற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

iii. 3 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

iv. அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் அத்துடன் தொடர்ச்சியான 05 வருட அண்மித்த காலப்பகுதியில் திருப்திகரமாக சேவையாற்றிருத்தல்

அத்துடன்

v. அங்கீகரிக்கப்பட்ட வினையாற்றுகை நடவடிக்கை முறைக்கு ஏற்ப பதவியுயர்வுக்கு முன்னரான 05 வருடகாலத்தில் திருப்திகரமாக வினையாற்றுகை செய்திருத்தல்.

**வயதெல்லை.**- 25 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்.**-MT-8 (ரூபா 50,970-10×1,385 -8×1,910-ரூபா 80,100)

* செவிலிகள் (விசேட தரம்) MT - 8 ரூபா 55,125 இன் 4 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.

03. **தாதிய சகோதரி.-**

**தகைமைகள்.-**

i. தரம் 1 இனைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

ii. வார்ட் மேற்பார்வையும் முகாமைத்துவமும்/போதித் தலும் மேற்பர்வையும்/பொதுச் சுகாதார தாதியல் மற்றும் குடும்பநலம்/தாதியல் உளச்சுகாதாரம் அடங்கலாக தேசிய தாதியல் பயிற்சிப் பாடசாலையால் அல்லது பின்படிப்பு ஆரம்ப தாதியல் பயிற்சிப் பாடசாலையால் நடாத்தப்படும் 1 1/2 வருட டிப்ளோமாவைப் பூர்த்தி செய்துள்ள தாதி உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

iii. 2 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

iv. அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் அத்துடன் தொடர்ச்சியான அண்மித்த 05 வருட காலப்பகுதியில் திருப்திகரமாக சேவையாற்றிருத்தல்

அத்துடன்

v. அங்கீகரிக்கப்பட்ட வினையாற்றுகை நடவடிக்கை முறைக்கு ஏற்ப பதவியுயர்வுக்கு முன்னரான 05 வருடகாலத்தில் திருப்திகரமாக வினையாற்றுகை செய்திருத்தல்.

**வயதெல்லை.**- 25 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்.**- MT - 7 (ரூபா 33,295-10×445- 11 × 660 -10 × 730- 5× 750 - ரூபா 59,805 )

* செவிலிகள் (விசேட தரம்) MT - 7 ரூபா 45,735.00 இன் 23 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.

04. **தாதிய உத்தியோகத்தர்**

**தகைமைகள்.-**

i. தாதியல் BSc பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது சுகாதார அமைச்சிலிருந்து தாதியல் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த. (உ.த.) உயிரியல் அல்லது கணிதம் அல்லது விவசாய பாடத்துறையில் (பொது அறிவு பரீட்சை உள்ளடங்காமல்) அனைத்துப் பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தி எய்திருத்தல் அல்லது குறிப்பிட்ட துறைகளில் பழைய பாடத்திட்டத்தில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி எய்திருத்தல்

அத்துடன்

iii. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாமல் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சிங்களம்/ தமிழ்மொழி பாடங்களில் நான்கு (04) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

**வயதெல்லை.**- 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்.**- MT - 7 (ரூபா 33,295-10×445-11 × 660-10 × 730 - 5× 750 - ரூபா 59,805 )

* தாதி உத்தியோகத்தர் MT - 7, 1 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.

05. **மருந்தாளர்.-**

**தகைமைகள்.-**

i. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்களுடன், (04) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆங்கிலம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த. (உ./த.) இரசாயனவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், பௌதீகவியல், அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி எய்திருத்தல்.

அத்துடன்

iii. a. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது நிறுவகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மருந்தியல்/ விஞ்ஞானம் (மருந்தியல்) பட்டம்

அல்லது

b. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் மருந்தாக்கவியல் தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

iv. a. மருந்தாளராக பணியாற்றுவதற்காக இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல்.


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2021, ஓகத்து மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, யூலை மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

b. விண்ணப்பதாரி வெளிநாட்டுப் பட்டத்தைக் கொண்டிருந்தால் இலங்கையில் மருந்தாளராக பணியாற்றுவதற்காக இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல்.

**வயதெல்லை**.- 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**.- MT -6 (ரூபா 32,850 - 10 × 445 - 11 × 660-10 × 730-10×750 - ரூபா 59,360 )

* மருந்தாளர்கள் MT 6 , 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவார்கள்.

06. **கதிரியக்கவியலாளர் (சிகிச்சை)**.-

**தகைமைகள்**.-

i. க.பொ.த (சா./த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ்மொழி பாடங்கள் அடங்கலாக நான்கு (04) திறமைச் சித்திகளுடன் இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் ஆங்கிலம் உட்பட (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த. (உ./த.) பௌதீகவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், இரசாயனவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி எய்திருத்தல்.

அத்துடன்

iii. a. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்குவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் ஒன்றிலிருந்து கதிரியக்க சிகிச்சை/கதிரியக்கவியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

b. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் கதிரியக்கம் தொடர்பான இரு வருட டிப்ளோமா பாட நெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

iv. a. கதிரியக்கவியலாளராக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

b. விண்ணப்பதாரி வெளிநாட்டுப் பட்டத்தைப் பெற்றிருந்தால் இலங்கையில் கதிரியக்கவியலாளராக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை**.- 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** .- MT -6 (ரூபா 32,850 -10 × 445 -11 × 660-10×730 -10× 750-ரூபா 59,360)

* கதிரியக்கவியலாளர் MT 6, 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

07. **தொழில்முறை சிகிச்சையாளர்**.-

**தகைமைகள்**.-

i. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்களுடன் நான்கு (04) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் ஆங்கிலம் அடங்கலாக (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த. (உ./த.) பௌதீகவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், இரசாயனவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி எய்திருத்தல்

அத்துடன்

iii. a. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்குவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் ஒன்றிலிருந்து தொழில்முறை தெரபிஸ்ட் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

b. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் தொழில் முறை தெரபிஸ்ட் தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

iv. a. தொழில்முறை தெரபிஸ்ட் ஆக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

b. விண்ணப்பதாரி வெளிநாட்டுப் பட்டத்தைப் பெற்றிருந்தால் இலங்கையில் கதிரியக்கவியலாளராக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை**.- 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** .- M - 6 (ரூபா 32,850 -10 × 445 - 11 × 660 -10 × 730 -10× 750 - ரூபா 59,360)

* தொழில்முறை தெரபிஸ்ட் MT 6, 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

08. **பல் சிகிச்சை தொழிநுட்பவியலாளர்**.-
**தகைமைகள்**.-

i. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்கள் அத்துடன் ஏனைய ஏதேனும் ஒரு பாடத்தில் திறமைச்சித்திகளுடன் ஆங்கிலம் உட்பட இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த. (உ./த.) விஞ்ஞானப் பிரிவில் இரசாயனவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், பௌதீகவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி எய்திருத்தல்

அத்துடன்

iii. பேராதெனிய பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவ பீடத்தினால் நடாத்தப்படும் பல் மருத்துவ தொழிநுட்பவியலாளர் தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

iv. இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல்.

வயதெல்லை: 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் : MT - 6 (ரூபா 32,850 - 10 × 445-11 × 660 - 10 × 730 - 10× 750 - ரூபா 59,360 )

பல் மருத்துவ தொழிநுட்பவியலாளர் MT 6 – 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

09. **கண் மருத்துவ தொழிநுட்பவியலாளர்**.-
**தகைமைகள்**.-

i. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்கள் அத்துடன் ஏனைய ஏதேனும் ஒரு பாடத்தில் திறமைச்சித்திகளுடன் ஆங்கிலம் உட்பட இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த. (உ./த.) பௌதீகவியல் பாடத்தில் திறமைச் சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், இரசாயனவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி எய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

iii. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் கண் மருத்துவ தொழிநுட்பவியலாளர் தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல வேண்டும்.

அத்துடன்

iv. a. கண் மருத்துவ தொழிநுட்பவியலாளராக இலங்கையில் பணியாற்றுவதற்காக இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

b. விண்ணப்பதாரி வெளிநாட்டு பட்டத்தைப் பெற்றிருப்பின் இலங்கையில் கண் தொழிநுட்ப வியலாளராக பணியாற்றுவதற்காக இலங்கை மருத்துவச் சபையின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை**.- 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MT -6 (ரூபா 32,850 -10× 445-11 × 660 -10 × 730-10× 750 - ரூபா 59,360)

பல் மருத்துவ தொழிநுட்பவியலாளர் MT 6 - 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

10. **கண்மருத்துவ உதவியாளர்**.-

**தகைமைகள்**.-

i. கண்மருத்துவ தொழிநுட்பவியலாளராக சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்

அத்துடன்

ii. சேவைக்கு உரித்தான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைகளில் சித்தியடைந்திருப்பதுடன் தரம் II ஐச் சேர்ந்தவராக அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடையவராக இருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதியன்று திருப்திகரமாக ஐந்து (05) வருடகால சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

அத்துடன்

iii. இலங்கை தேசிய கண் வைத்தியசாலையால் நடாத்தப்படும் 06 மாதகாலப் பயிற்சியைப் பூர்த்தி செய்திருப்பதுடன் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

iv. இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல்.

**வயதெல்லை**.-22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

MT - 6 (ரூபா 32,850 -10 × 445 - 11 × 660 - 10 × 730 - 10× 750- ரூபா 59,360)

கண் மருத்துவ உதவியாளர் MT 6, 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

11. **குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்**.-

**தகைமைகள்**.-

i. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்களுடன் ஏனைய ஏதேனும் ஒரு பாடம் அடங்கலாக திறமைச்சித்திகளுடன் இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் ஆங்கிலம் உட்பட (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த. (உ./த.) உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல், இரசாயனவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி எய்திருத்தல்

அத்துடன்

iii. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் 1 ½ வருடங்களைக் கொண்ட குடும்ப நல சுகாதார முழுநேர டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்

அத்துடன்

iv. பெண்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

**வயதெல்லை**.- 22 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**.- MT - 5 (ரூபா 32,405 - 10 × 445 - 11 × 660 - 10 ×730 -10× 750 - ரூபா 58,915)

* குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள் MT 5, 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

**பொது நிபந்தனைகள்**:

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலையினுள் அல்லது பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் ஏனைய எந்தவொரு பிரதேசத்திலும் அத்துடன் பதவிக்குரித்தான கடமைகளை புரியும் பொருட்டு உடல் உள வலிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
5. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் ஆரம்ப தர - மருத்துவ துறை சாராத உத்தியோகத் தர்கள் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன், ஏனைய விசேட தரப்பதவிகள் மற்றும் ஆகியோர் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.
6. ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியர் 10% பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் 15% ஊழியர் சேமலாப நிதியும் (EPF), 10% ஊழியர் நம்பிக்கை நிதியும் (ETF) பல்கலைக் கழகத்தினால் பங்களிப்புச் செய்யப்படும்.
7. சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப் படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு "நிறைவேற்றுப் பணிப்பாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்லாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை, வேரஹெர" என்ற முகவரிக்கு 2021.07.25 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பித்த பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
8. எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுத்து பட்டியலிடுவதற்கான உரிமையை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.
9. சரியாக பூரணப்படுத்தப்படாத அல்லது காலதாமதமாகி அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பங்களும் குறிப்பிடப்பட்டதற்கிணங்க தயாரித்து அனுப்பாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
10. விண்ணப்பம் மற்றும் ஏனைய தகவல்களை கொ.பா.ப. வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். www.kdu.ac.lk

ஜெனரல் கமால் குணரத்ன (ஓய்வுநிலை),
டப்டப்வீ ஆர்டப்பீ ஆர்எஸ்பீ யூஎஸ்பீ
என்டீசீ பீஎஸ்சீ எம்பில்,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

07-382

**கவனிக்க.- 2021.07.16 ஆந் திகதி வெளியாகும் வர்த்தமானி பகுதி I: தொகுதி (IIஅ) - இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்படுகின்றன.**

# பதவிகள் - வெற்றிடம்

### அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### அமைச்சரவை அலுவலகத்தில் சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று சேவை வகுதி - தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021

அமைச்சரவை அலுவலகத்தில் நிறைவேற்று வகுதியின் III ஆம் தரத்தைச் சேர்ந்த சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை.-** இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர் இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவார். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு அமைவாக தகைமைகளை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சையானது நடாத்தப்படும்.

நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) **கல்வி/தொழில் தகைமைகள் :**

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

(ii) **அனுபவம் :**

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் சட்டத்தரணி ஒருவராக மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான தொழில்சார் அனுபவம் பெற்றிருத்தல். (தொடர்ச்சியான தொழில்சார் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவம் பெற்றுக் கொள்ளப்பட்ட காலம், திகதி மற்றும் உறுதிப்படுத்துபவரின் உத்தியோகபூர்வ முத்திரை என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.)

அல்லது

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் அரசாங்க நிறுவனமொன்றில் சட்டத்துறையில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத பின்வரும் பணிகளுக்கு ஏற்புடையதான அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

(அ) அரச வழக்குகள் தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருத்தல்;
(ஆ) உடன்படிக்கைகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள்;
(இ) ஏற்புடைய சட்ட திட்டங்கள் சம்பந்தமான சட்ட நடவடிக்கைகள்;
(ஈ) சட்டமூலங்கள், சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள் போன்ற சட்ட ஆவணங்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகள்;
(உ) பல்வேறுபட்ட நியதிச்சட்ட நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற சட்ட அல்லது நீதிமன்ற நடவடிக்கைகள் அல்லது விசாரணை நடவடிக்கைகள்;
(இந்த விடயங்கள் செயலாளர்/திணைக்களத் தலைவர் அவர்களினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

(iii) **உடற் தகைமை :**

விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உள மற்றும் உடல் தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) **பிற தகைமைகள் :**

- இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்;
- விண்ணப்பதாரர் நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்;
- ஏதேனும் சமய பிரிவொன்றில் துறவியாகவுள்ள எவரும் இதற்காக விண்ணப்பிக்கும் தகைமையினைக் கொண்டிருக்க மாட்டார்கள் ;
- விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்.-**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்துக்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். தாங்கள் விதவைகள்/அநாதைகள்/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படுகின்றவாறு தாங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 ஆண்டுகளைக் கொண்ட தகுதிகூர் காலத்துக்கு உட்பட்டதாகும். பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆந் திகதியிடப்பட்டதும் 18/2020 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய அரச கரும மொழியில்/மொழிகளில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களம் சார்ந்த ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனமானது உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாதென்பதோடு, தாங்கள் நியமனம் பெறுவதற்குத் தகைமை பெற்ற மொழி மூலமாவது தாங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலமாகும்.

4. **வயதெல்லை.-** விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்றுக்கு 21 வயதுக்குக் குறையாதிருத்தல் வேண்டுமென்பதோடு, 45 வயதிற்கு மேற்படாதிருத்தலும் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.-** 2016.02.25 ஆந் திகதியிடப்பட்டதும் 03/2016 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணையின்படி இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டமானது ரூபா 47,615.00 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895.00 (SL 1- 2016) ஆகும்.

6. தகுதிகளை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் புள்ளிகள் வழங்கும் திட்டமானது அடிப்படையாகக் கொள்ளப்படும் :

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளி | ஆகக்கூடிய புள்ளி |
|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 25 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம் | 25 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டபின் படிப்பு டிப்ளோமா | 20 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட - | 15 | |
| | • முதலாம் வகுப்பு சித்தியுடன் கூடிய சட்டமாணி பட்டம் | 10 | |
| | • இரண்டாம் வகுப்பில் உயர் சித்தியுடன்கூடிய சட்டமாணி பட்டம் | 07 | |
| | • வகுப்பு சித்தியுடன்கூடிய சட்டமாணி பட்டம் | 05 | |
| | • சாதாரண சித்தியுடன்கூடிய சட்டமாணி பட்டம் | 10 | |
| | (ஈ) இலங்கை சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் முதலாம் வகுப்பு சித்தி<br>இலங்கை சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் இரண்டாம் வகுப்பு சித்தி<br><br>**குறிப்பு** I : இலங்கை சட்டக் கல்லூரியில் இறுதிப் பரீட்சையில் சிறப்பு சித்தியுடன் சித்தியடைந்திருந்தால் மாத்திரம் 05 புள்ளிகள் வழங்கப்படும்.<br>**குறிப்பு** II : அதி கூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | 05 | |
| 02. | **மேலதிக தொழில்சார் தகமைகள் :**<br><br>விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 2 (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தன்மையிலான மேலதிக அனுபவம்.<br><br>(அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான 03 வருட அனுபவம் தவிர)<br><br>- ஆண்டொன்றிற்கு 07 புள்ளிகள் வீதம் ஆகக்கூடதலாக : புள்ளிகள் 35<br>- 06 மாதங்களுக்கு மேற்பட்ட மற்றும் ஆண்டொன்றுக்கு குறைந்த காலப்பகுதிக்கு: புள்ளிகள் 03<br><br>* 15 ஆண்டுக்குக் குறையாத சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த (இந்த சேவைக் காலம், விண்ணப்பதாரியின் பொருட்டு வழங்கப்படுகின்ற சான்றிதழில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.) சட்டத்தரணி ஒருவரிடமிருந்து அல்லது நீதிமன்ற சேவையில் உள்ள அலுவலர் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் மூலம் மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.<br><br>* அரசாங்க அல்லது தனியார் துறை அலுவலர் ஒருவர் மேற்போந்த தகைமைகளை சட்டத்துடனான பதவியொன்றில் சேவையாற்றிய காலப்பகுதிக்கள் பூர்த்தி செய்யப்பட்டதாக, சம்பந்தப்பட்ட திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சேவை சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். | | 35 |
| 03 | **தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு** | | 10 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் படிப்புக்காக தகவல் தொழில்நுட்பம் அல்லது கணனி விஞ்ஞானம் பிரதான பாடமாக கற்றிருத்தல். | 10 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியில் அல்லது வேறு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்துறையில் டிப்ளோமா | 08 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா அல்லது வேறு நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில் நுட்பம் தொடர்பான NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான டிப்ளோமா. | 05 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியில் அல்லது வேறு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி/ தொழில்சார் நிறுவனமொன்றில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்துறை பாடநெறிகளைக் கற்று/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்து கொண்டு பெற்றுக்கொண்ட சான்றிதழ். (சான்றிதழொன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியதாக இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.)<br><br>**குறிப்பு** : அதி கூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | 04 | |
| 04 | **மொழித்தேர்ச்சி :** | | 15 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில மொழி யானது பிரதான பாடமாக கொண்ட பட்டம். | 15 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பான பட்டப்பின் படிப்பினை ஆங்கில மொழி மூலம் கற்றிருத்தல் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியினை ஆங்கில மொழி மூலம் கற்றிருத்தல். | 12 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழி சார்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட டிப்ளோமா அல்லது வேறு நிறுவனமொன்றில் ஆங்கில மொழி சார்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான டிப்ளோமா. | 10 | |
| | (ஈ) கல்விப் பொது தராதர (உயர் தரம்) பரீட்சையில் (உள்நாடு அல்லது லண்டன்) ஆங்கில மொழிக்கு ஆகக் குறைந்தது அதி சித்தி பெற்றிருத்தல், அல்லது IELTS (Academic) மொத்தப் புள்ளிகள் 6.5, அல்லது அதற்கு மேற்பட்ட, TOEFL - IBT 79, அல்லது அதற்கு மேற்பட்ட, TOEFL - CBT 213 அல்லது அதற்கு மேற்பட்ட, அல்லது TOEFL - PBT 550 அல்லது அதற்கு மேற்பட்டதாகவிருத்தல். | 08 | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழி சார்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட உயர் சான்றிதழ் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு நிறுவனமொன்றில் ஆங்கில மொழி சார்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட NVQ 4 ஆம் மட்ட சான்றிதழ்.<br><br>**குறிப்பு** : அதி கூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | 05 | |

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளி | ஆகக்கூடிய புள்ளி |
|---|---|---|---|
| 05 | **நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் ஆற்றல் :** | | 15 |
| | (i) பொது அறிவு மற்றும் புரிந்துகொள்தல் | 05 | |
| | (ii) சட்டத்துறையில் நவீன போக்கு தொடர்பான அறிவு | 05 | |
| | (iii) தெளிவாக கருத்துக்களை தெரிவிக்கும் ஆற்றல் மற்றும் ஆளுமை | 05 | |
| | **மொத்தம்** | | **100** |

**குறிப்பு.-** தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களின் காலப்பகுதி தொடர்பாகக் குறிப்பிடப்படவில்லையாயின், அத்தகைய சான்றிதழ்களுக்குரிய காலப்பகுதியை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் ஊடாக எழுத்துமூலம் உறுதிப்படுத்திக்கொண்டு சமர்ப்பிப்பது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும். இவ்வாறு காலப்பகுதி குறிப்பிடப்படாத மற்றும் காலப்பகுதி உறுதிப்படுத்தப்படாத சான்றிதழ்களுக்கு புள்ளி வழங்குவது சம்பந்தமாக பரிசீலனை செய்யப்படமாட்டாது.

7. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம்.-** தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமாவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை.

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறை.-**

(i) விண்ணப்பங்களை 2021,ஓகத்து மாதம் 23 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "அமைச்சரவைச் செயலாளர், அமைச்சரவை அலுவலகம், குடியரசு சதுக்கம், சேர் பாரொன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு - 01" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவமானது இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை A4 அளவு தாளொன்றில் தயாரித்து முதலாம் பக்கத்தில் இலக்கம் 1.1 இலிருந்து 3.5 வரையும், இரண்டாம் பக்கத்தில் இலக்கம் 4.0 இலிருந்து 5.0 வரையும், மூன்றாம் பக்கத்தில் இலக்கம் 6.0 இலிருந்து 8.0 வரையும் இருக்கக்கூடிய விதத்தில் தயாரித்து தத்தமது கையெழுத்துக்களில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் இட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட உத்தியோகத்தர் III ஆம் தரத்தைச் சேர்ந்த பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவரினால்/சமாதான நீதவான் ஒருவரினால் /சத்திய ஆணையாளர் ஒருவரினால் /சட்டத்தரணி ஒருவரினால் / பிரசித்த நொத்தாரிச ஒருவரினால் /முப்படையைச் சேர்ந்த ஆணைபெற்ற அலுவலர் ஒருவரினால் அல்லது ரூபா 47,615.00 அல்லது அதற்கு மேல் மாதாந்த இணைந்த சம்பளமொன்றைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் திணைக்கள தலைவர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

(vi) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் பொறுப்பேற்கப்படமாட்டாது.

9. **செம்மையற்ற தகவல்களை வழங்குதல்.-** தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் உண்மையற்றதென அல்லது பிழையானதென ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் தெரிய வந்தால் தங்களது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். இத்தகைய உண்மையற்ற அல்லது பிழையான தகவல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவந்தால் அதற்குரிய நடவடிக்கை முறைகளுக்கு அமைவாக சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடத்தை நிரப்பும் அல்லது நிரப்பாது விடும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

11. இவ் வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழி பதங்களுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி பதங்களே மேலோங்கி நிற்கும்.

12. இந்த அறிவித்தலில் அல்லது இந்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்படாத விடயமொன்று சம்பந்தமாக ஏதேனும் பிரச்சினையான நிலைமை எழுந்தால் அது தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

அரசாங்க சேவைகள் ஆணக்குழுவின் கட்டளைப்படி,

அமைச்சரவைச் செயலாளர்.

அமைச்சரவை அலுவலகம்,
குடியரசு சதுக்கம்,
சேர் பாரொன் ஜயதிலக்க மாவத்தை,
கொழும்பு - 01,
2021, யூலை மாதம் 07.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**அமைச்சரவை அலுவலகம்**

**சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று சேவை வகுதியைச் சேர்ந்த தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்**

☐
(அலுவலக உபயோகத்துக்கு)

(விண்ணப்பிக்கும் மொழி மூலம் - உரிய இலக்கத்தை இந்த கூட்டினுள் எழுதுக.)

சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4 ☐

குறிப்பு : விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்ற முடியாது.

1.0 1.1 முழுப்பெயர் (திரு. /திருமதி/செல்வி) : ..............................
(சிங்களத்தில்/தமிழில்)

1.2 முழுப் பெயர் :..............................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் : (திரு. /திருமதி/செல்வி) ..............................
(சிங்களத்தில்/தமிழில்)

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு. /திருமதி/செல்வி): ..............................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.0 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :
..............................

2.2 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
..............................

2.3 தொலைபேசி இலக்கம் :
..............................

3.0 3.1 பால் : ஆண் - 0 / பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

3.2 திருமணமானவரா/திருமணமாகாதவரா : திருமணமானவர் - 1 / திருமணமாகாதவர் - 2 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

3.3 பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.4 2021.08.23 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள்: ☐☐

3.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 4.1 விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலுக்கு அமைவாக பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் பற்றிய விபரம் :

| தகைமை | பெற்றுக்கொண்ட நிறுவனம் | தகைமை செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|
| .............................. | .............................. | .............................. |
| .............................. | .............................. | .............................. |

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப் பிரமாணம் செய்த திகதி :........................

4.2 விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலின் இலக்கம் 6 இன் கீழான தகைமை ஒவ்வொன்றும் பெற்றுக் கொண்டுள்ளமைக்கான விபரம் :

| | தகைமை | பெற்றுக்கொண்ட நிறுவனம் | தகைமை செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| அ. மேலதிக கல்வித் தகைமைகள் : | | | |
| | .............................. | .............................. | .............................. |
| | .............................. | .............................. | .............................. |
| ஆ. மேலதிக தொழில்சார் தகைமைகள் : | | | |
| | .............................. | .............................. | .............................. |
| | .............................. | .............................. | .............................. |
| இ. மொழித் தேர்ச்சி : | | | |
| | .............................. | .............................. | .............................. |
| | .............................. | .............................. | .............................. |
| ஈ. தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு : | | | |
| | .............................. | .............................. | .............................. |
| | .............................. | .............................. | .............................. |

5.0 தாங்கள் ஏதேனும் குற்றச்சாட்டொன்றுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?
பதிலானது "ஆம்" எனின் அது தொடர்பிலான விபரம் :..................................

6.0 விண்ணப்பதாரரின் சான்றிதழ் :

மேற்குறிப்பிட்ட விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் பிழையற்றவையெனவும், உண்மையானவையெனவும், சகல பகுதிகளையும் உரிய முறையில் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் என்னால் செய்யப்பட்ட இந்த வெளிப்படுத்தல் உண்மையற்றதென கண்டுபிடிக்கப்பட்டால் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் தகைமையற்றவராவேன் எனவும் நியமனம் கிடைத்ததன் பின்னர் சேவையிலிருந்து நீக்குவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன் எனவும் சகல சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவேன் என்பதையும் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

............................
திகதி :...................... விண்ணப்பதாரரின் கையொப்பம்.

7.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................ என்பவரை தனிப்பட்ட வகையில் நான் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் ................ ஆம் திகதியன்று கையொப்பமிட்டாரெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

............................
அத்தாட்சிப்படுத்துபவரின்
கையொப்பம்.
முழுப்பெயர் :...............................
பதவி :................................
திகதி :...................................
(பதவி முத்திரையை பொறிக்கவும்.)

8.0 அமைச்சின் செயலாளரின்/திணைக்களத் தலைவரின் சிபாரிசு : (அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களுக்கு மாத்திரம்)

மேலே விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள திரு./ திருமதி/ செல்வி ................................ அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையாற்றுகின்றாரெனவும், அவர் வழங்கியுள்ள விபரங்கள் சரியானவையெனவும், வேலை மற்றும் வருகை திருப்திகரமானதெனவும், அவருக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுக்களும் இல்லையெனவும், இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால், இந்த நிறுவன சேவையிலிருந்து விடுவிக்க முடியுமெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

............................
அமைச்சு செயலாளரின் /திணைக்கள/நிறுவனத்
தலைவரின் கையொப்பம்.

திகதி :...............................
பெயர் :...............................
பதவி :......................
(உத்தியோகபூர்வ இலட்சினையை பொறிக்கவும்)

07-423

**இலங்கைப் பாராளுமன்றம்**

வெற்றிடங்கள்

**மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர் பதவி**

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியிலுள்ள "மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர்" பதவிக்கு சிறந்த உடலாரோக்கியமும், நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன்கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் தயாரித்த விண்ணப்பங்கள் 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர் பதவி" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். (இந்த அறிவித்தல் பற்றிய விபரங்களை www.parliament.lk என்ற இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.)

